| மொத்தம் | 30 | | 21 |

6.

**I. நிகழ்ச்சிகள் மாநாடுகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் தொடர்பான விபரம்**

| விடயம் | | பூரணப்படுத் தப்பட்டவை | தொடர்ந் தும் இருப் பவை |
|---|---|---|---|
| a. பட்டமேல் பாடநெறிகளின் எண்ணிக்கை<br>முதுமானி / முதுகலைமானி 02<br>தகவல் முகாமைத்துவம் 01<br>நூலக தகவல் விஞ்ஞானம் 02<br>ஆசிரிய நூலகத்துவம் (முழு நேரம்) 01<br>ஆசிரிய நூலகத்துவம் (பகுதி நேரம்) 01 | 09 | 03 | 06 |
| b. பட்டமேல் டிப்ளோமா பாடநெறிகளின் எண்ணிக்கை | 08 | 03 | 05 |
| c. பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை | - | - | - |
| d. டிப்ளோமா பாடநெறிகளின் எண்ணிக்கை | 05 | 02 | 03 |
| e. சான்றிதழ் பத்திர பாடநெறிகளின் எண்ணிக்கை | 06 | 04 | 02 |
| f. ஏனையவை<br>பயிற்சிப் பட்டறைகள் மற்றும் மாநாடுகள் | | | |
| மொத்தம் | 28 | 12 | 16 |

**II. கிடைக்கப் பெற்ற விருதுகள் தொடர்பான விபரம்**

| விடயம் | | No. of Acadamics | மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| a. உள்நாட்டு விருதுகள் | | | |
| b. தேசிய விருதுகள் | 01 | | |
| c. சர்வதேச விருதுகள் | | | |
| d. ஏனையவை | | | |
| மொத்தம் | 01 | | |

**III. நிகழ்ச்சிகள் மாநாடுகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் தொடர்பான விபரம்**

| விடயம் | பாடநெறிகளில் கலந்துகொண்டவர்கள் எண்ணிக்கை |
|---|---|
| ஆய்வு முறைமை தொடர்பான நிகழ்ச்சி (27-11-2013 – 07-02-2014) | 33 |
| Workshop on Digital Library (15-03-2014) | 21 |
| காரியாலய முகாமைத்துவத்திற்கான தகவல் தொழில்நுட்ப பயிற்சிப் பாடநெறி (03-04-2014 – 05-06-2014) | 16 |
| காரியாலய முகாமைத்துவத்திற்கான தகவல் தொழில்நுட்ப பயிற்சிப் பாடநெறி (04-09-2014 – 16-10-2014) | 17 |
| ஜேடுஜளு மாநாடு 2014 (21-11-2014) | 126 |
| MPhil / PhD மாநாடு (22-11-2014) | 26 |
| ஆசிரிய நூலகர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி தெனுவர கல்வி வலயம் (17-02-2014) | 40 |
| ஆசிரிய நூலகர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி மாத்தளை கல்வி வலயம் (18-02-2014) | 40 |
| ஆசிரிய நூலகர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி கண்டி கல்வி வலயம் (24-02-2014) | 40 |
| ஆசிரிய நூலகர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி கடுகஸ்தொட கல்வி வலயம் (25-02-2014) | 40 |
| ஆசிரிய நூலகர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி நுவரெலிய கல்வி வலயம் (03-03-2014) | 40 |
| ஆசிரிய நூலகர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி நுவரெலிய கல்வி வலயம் (04-03-2014) | 40 |
| ஆசிரிய நூலகர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி ஹோட்டன் கல்வி வலயம் (11-03-2014) | 40 |
| ஆசிரிய நூலகர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி கொத்மலை கல்வி வலயம் (17-03-2014) | 40 |
| ஆசிரிய நூலகர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி கம்பளை கல்வி வலயம் (18-03-2014) | 40 |
| ஆசிரிய நூலகர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி வலப்பனே கல்வி வலயம் (24-03-2014) | 40 |
| ஆசிரிய நூலகர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி வலப்பனே கல்வி வலயம் (25-03-2014) | 40 |
| ஆசிரிய நூலகர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி நாஉல கல்வி வலயம் (31-03-2014) | 40 |
| ஆசிரிய நூலகர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி வெலிகமுவ கல்வி வலயம் (01-04-2014) | 40 |
| ஆசிரிய நூலகர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி கலேவெல கல்வி வலயம் (28-04-2014) | 40 |
| ஆசிரிய நூலகர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி ஹங்குரன்கெத கல்வி வலயம் (29-04-2014) | 40 |
| ஆசிரிய நூலகர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி தெல்தெனிய கல்வி வலயம் (06-05-2014) | 40 |
| ஆசிரிய நூலகர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி கம்பளை / கொத்மலை கல்வி வலயம் (12-05-2014) | 40 |

## 8. மீண்டெழும் செலவுகள் தொடர்பான விபரம்

| விடயம் | 2013 ரூ. | 2014 ரூ. |
|---|---|---|
| 1. தனிப்பட்ட சம்பளம் | 13,148,980 | 13,671,862 |
| 2. போக்குவரத்து | 14,887 | 18,729 |
| 3. விநியோகம் | 927,175 | 703,985 |
| 4. பராமரிப்பு | 501,345 | 592,687 |
| 5. ஒப்பந்த சேவை | 1,634,670 | 1,352,992 |
| 6. ஏனையவை | 1,988,667 | 1,539,431 |
| மொத்தம் | | |

## 9. மூலதனச் செலவுகள் தொடர்பான விபரம்

| விடயம் | 2013 ரூ. | 2014 ரூ. |
|---|---|---|
| 1. தளபாட மற்றும் காரியாலய உபகரங்களைக் கொள்வனவு செய்தல் | 956,770 | 962,502 |
| 2. இயந்திர உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் | 1,647,500 | 1,162,051 |
| 3. கட்டிடம் மற்றும் உள்ளக உபகரணக் கொள்வனவு | 398,147 | 179,082 |
| 4. ஏனையவை | 199,925 | 496,693 |
| மொத்தம் | | 2,800,328 |

**1 அட்டவணை – முதுமானி / முதுகலைமானி / கலைமானி**

| | மாணவரின் பெயர் | ஆய்வுக் கட்டுரையின் தலைப்பு | மேற்பார்வையாளரின் பெயர் |
|---|---|---|---|
| 1. | சி.என். அழகக்கோன் | இலங்கையில் தெரிவுசெய்யப்பட்ட பல்கலைக்கழகங்களில் தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பப் பாவனை தொடர்பான மதிப்பீட்டாய்வு | கலாநிதி சி.சி. ஜயசுந்த – சிரேஷ்ட உதவி நூலகர், கொழும்பு பல்கலைக்கழகம் |
| 2. | எச்.பி.எஸ்.டீ. குணசேகர | திறந்த மற்றும் தொலை கற்றல் வழங்கலின் பாவனை: இலங்கை தொடர்பான முன்மொழிவுகள் | பேராசிரியர் ஜீ.ஐ.சி. குணவர்தன |
| 3. | ரீ.என். நெய்சூரி | இலத்திரனியல் பிரஜையொன்றாக மாற்றும் செயற்பாட்டில் இலத்திரனியல் அரச கட்டுப்பாடு மற்றும் நூலக சேவைகளின் முக்கியத்துவம். | பேராசிரியர் என்.டீ. கொடிகார – கொழும்பு பல்கலைக்கழக கணினி கல்வி நிறுவனம்<br>கலாநிதி வத்மானல் செனவிரத்ன – நூலகர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் |
| 4. | எம்.டீ.ஆர். குமுதினி | இலங்கையின் தகவல் தேடல் தொடர்பான தன்மையும் சர்வதேச தர நிர்ணயமும் | கலாநிதி ருவன் கமகே, சிரேஷ்ட விரிவுரையாளர், தேசிய நூலக விஞ்ஞான நிறுவனம், கொழும்பு பல்கைக்கழகம் |
| 5. | எஸ்.எம். விஜேசிங்க | சிரேஷ்ட இடைநிலை காலப் பகுதியில் பாடசாலை மாணவர்கள் மற்றும் கற்பிக்கும் ஆசிரியர்களின் பாடசாலை நூலக பாவனை தொடர்பான ஆய்வு | கலாநிதி ஏ.ஏ. ஜயவர்தன – சிரேஷ்ட விரிவுரையாளர், கல்விப் பீடம் கொழும்பு பல்கலைக்கழகம் |

## 2. நூலக மற்றும் தகவல் விஞ்ஞான முதுமானிப் பாடநெறி (MLS)

| | மாணவரின் பெயர் | ஆய்வுக் கட்டுரையின் தலைப்பு | மேற்பார்வையாளரின் பெயர் |
|---|---|---|---|
| 1. | கே.என்.எல். பெரேரா | கல்வி சார் நூலகங்களில் பல்சுவை சார் வாசிப்பின் தேவைப்பாடு: கொழும்பு பல்கலைக்கழகத்தின் நூலகத்தை மையப்படுத்திய ஆய்வு | பி.ஜீ. பேமதாஸ – சிரேஷ்ட விரிவுரையாளர், தேசிய நூலக விஞ்ஞான நிறுவனம் கொழும்பு பல்கலைக்கழகம் |
| 2. | என்.டீ.சி. விஜேசேகர | சர்வதேச கல்விசார் சஞ்சிகைகளில் ஆய்வு சார் கட்டுரைகளை வெளியிடுகின்றபோது, சமூக விஞ்ஞானிகள் முகம்கொடுக்கின்ற சவால்கள் தொடர்பான ஆய்வு | கலாநிதி ருவன் கமகே – சிரேஷ்ட விரிவுரையாளர், தேசிய நூலக விஞ்ஞான நிறுவனம் கொழும்பு பல்கலைக்கழகம் |

### 3. நூலக மற்றும் தகவல் விஞ்ஞான பட்டப் பின் டிப்ளோமா (PGLIS)

| | மாணவரின் பெயர் | ஆய்வுக் கட்டுரையின் தலைப்பு | மேற்பார்வையாளரின் பெயர் |
|---|---|---|---|
| 1. | பீ. ரெவின் பெஸ்டியன் | விதுபியஸ பயிற்சிப் பாடநெறிக்கு இலங்கை மத்திய வங்கி நூலகத்தின் தகவல் சேவை மூலம் வழங்கப்படுகின்ற பங்களிப்பு தொடர்பான ஆய்வு | உதித அழகக்கோன் – சிரேஷ்ட உதவி நூலகர், தேசிய நூலக விஞ்ஞான நிறுவனம் கொழும்பு பல்கலைக்கழகம் |
| 2. | எஸ்.எஸ். வீரசிங்க | இலங்கை தேசிய நூலகத்தின் நூலக விஞ்ஞான கல்வி சேகரிப்பு மற்றும் அதன் பாவனை தொடர்பான ஆய்வு | உதித அழகக்கோன் – சிரேஷ்ட உதவி நூலகர், தேசிய நூலக விஞ்ஞான நிறுவனம் கொழும்பு பல்கலைக்கழகம் |
| 3. | சௌம்யா உபமாலிகா | பழக் கன்று ஆய்வுக்காக இலத்திரனியல் மூலங்களில் பாவனை தொடர்பான விமர்சன ஆய்வு | சீ. அழகக்கோன் – சிரேஷ்ட உதவி நூலகர், பேராதனைப் பல்கலைக்கழகம் |
| 4. | ஜீ.கே.எஸ். பெரேரா | தொல்பொருளியல் பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் பட்டப் பின் ஆய்வுக் கட்டுரை தொடர்பான ஆய்வு | ஜீ.டீ.என்.எம். சமரதிவாகர – சிரேஷ்ட உதவி நூலகர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், கங்கொடவில நுகேகொட |
| 5. | பி.எஸ்.எம். அபேவிக்ரம | இலங்கையின் நாவல்கள் பற்றிய நூல் வெளியீடு தொடர்பான சுவர்ண புஸ்தக விருதானது செலுத்துகின்ற தாக்கம் தொடர்பான ஆய்வு | உதித அழகக்கோன் – சிரேஷ்ட உதவி நூலகர், தேசிய நூலக விஞ்ஞான நிறுவனம் கொழும்பு பல்கலைக்கழகம் |
| 6. | எஸ். உதேனி விஜயதிலக்க | பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் தேசிய நூலகத்தின் தகவல் வள பாவனை தொடர்பான ஆய்வு | வருணி கங்கபட ஆரச்சி, பிரதான நூலகர், கொழும்பு பொது நூலகம், கொழும்பு |
| 7. | டபிள்யு.டபிள்யு.பி.என். கீகியனகே | நூலக தகவல் முகாமைத்துவத்தின் போது தகவல் வள பாவனை தொடர்பான ஆய்வு | ஜீ.டீ.என்.எம். சமரதிவாகர – சிரேஷ்ட உதவி நூலகர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், கங்கொடவில நுகேகொட |

| | | | |
|---|---|---|---|
| 8. | என். குமாரி தஹநாயக்க | இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் பட்டப் பின் படிப்பு அபேட்சகர்களின் இலத்திரனியல் ஊடகப் பாவனை தொடர்பான விமர்சன ஆய்வு | பி.கே. பெரேரா- நூலகர் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம், மாலபே |
| 9. | டபிள்யு.சி. கொடிதுவக்கு | APIIT நிறுவனத்தின் மாணவர்களது கல்வி நடவடிக்கைகளின் போது முகநூல் பாவனை பற்றிய ஆய்வ | ஜாவட் அஸான் - விரிவுரையாளர், ஆசிய பசுபிக் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் |
| 10. | மல்மி ஏக்கநாயக்க | பாடசாலை நூலகத்தின் மூலம் மாணவர்களின் சிங்கள மொழி இயலுமையை விருத்தி செய்வது தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வு (லைசியம் சர்வதேசப் பாடசாலையை மையமாகக்கொண்டது) | ஆர்.பி.பி. ரணவீர – பணிப்பாளர், தேசிய நூலக விஞ்ஞான நிறுவனம் கொழும்பு பல்கலைக்கழகம் |
| 11. | கே.எஸ். குணசேகர | பாடசாலை மாணவர்களின் ஒப்படைகளைப் பூரணப்படுத்துவதற்காக நூலகங்களை உபயோகப்படுத்துவதற்கான ஆய்வு (மியுசியஸ் கல்லூரி தரம் 8 மாணவர்களை மையமாகக் கொண்டது. | உதித அழகக்கோன் – சிரேஷ்ட உதவி நூலகர், தேசிய நூலக விஞ்ஞான நிறுவனம் கொழும்பு பல்கலைக்கழகம் |
| 12. | என்.கே. விஜேதுங்க | நீர்வழங்கல் செயற்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளுக்கு நூலக வளங்களின் பங்களிப்பு தொடர்பான ஆய்வு | கலாநிதி டப்ளியு.கே. வீரக்கொடி – பிரதான பொறியியலாளர், நீர் வழங்கல் செயற்திட்டம். |
| 13. | டீ. சனிஆயா விதானவசம் | பொருளாதார மற்றும் புள்ளிவிபரவியல் ஆய்வு நடவடிக்கைகளின் போது இலங்கை மத்திய வங்கியின் பிரதான நூலகத்தின் நடவடிக்கை தொடர்பான ஆய்வு | கே.ஜீ.ஜீ.டபிள்யு. விஜேவீர – நூலகர், வைத்திய கல்லூரி, பட்டப் பின் படிப்பு நிறுவனம், ஆதார வைத்தியசாலை, பேராதனை. |
| 14. | டபிள்யு.எம்.ஐ.எம். விஜேசுந்தர | இலங்கையில் சிங்கள மொழி மூலம் வெளியிடப்பட்ட சிறுவர் நூல்கள் தொடர்பான ஆய்வு (2012 மற்றும் 2013 வருடங்களில் வெளியிடப்பட்ட நூல்களை மையமாக வைத்து) | உதித அழகக்கோன் – சிரேஷ்ட உதவி நூலகர், தேசிய நூலக விஞ்ஞான நிறுவனம் கொழும்பு பல்கலைக்கழகம் |
| 15. | ஆர்.எம்.ஆர். தியலகெதர | அரச பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்குகின்ற ஆயுத சேவை ஊழியர்களின் நூலக பாவனை தொடர்பான விமர்சன ஆய்வு | கலாநிதி ருவன் கமகே – சிரேஷ்ட விரிவுரையாளர், தேசிய நூலக விஞ்ஞான நிறுவனம் கொழும்பு பல்கலைக்கழகம் |
| 16. | பீ.வீ.ஆர்.ஜீ.ஜீ. ராமஹாமி | நூலக வளப் பாவனையில் பூகோல விஞ்ஞான விடய கற்பித்தல் தொடர்பான நடவடிக்கை சார் ஆய்வு (கே./பண்டாரநாயக்க கல்லூரி, தரம் 8 மாணவர்களை மையமாகக் கொண்டது.) | பி.ஜீ பேமதாஸ – சிரேஷ்ட விரிவுரையாளர், தேசிய நூலக விஞ்ஞான நிறுவனம் கொழும்பு பல்கலைக்கழகம் |

## 4. ஆசிரிய நூலகத்துவம் தொடர்பான முதுமானிப் பாடநெறி (MTL)

| | மாணவரின் பெயர் | ஆய்வுக் கட்டுரையின் தலைப்பு | மேற்பார்வையாளரின் பெயர் |
|---|---|---|---|
| 1. | டி. அனுலா குமாரஹாமி | பாடசாலை மாணவர்களின் தொடர்பாடல் திறன்களை விருத்தி செய்வதற்காக வானொலி ஊடகத்தைப் பயன்படுத்தும் முறை பற்றிய ஆய்வு. (அனுதாரபுர ரஜரட்ட வானொலி சேவை மற்றும் தீபானி மகா வித்தியாலய மாணவர்களை மையமாகக் கொண்டது. | உதித அழகக்கோன் – சிரேஷ்ட உதவி நூலகர், தேசிய நூலக விஞ்ஞான நிறுவனம் கொழும்பு பல்கலைக்கழகம் |
| 2. | எச்.ஜே.ஜே. ஹேரத் | தகவல் தேடல் திறன் விருத்திக்காக பாடசாலை கற்றல் வள மத்திய நிலையத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற நிகழ்ச்சிகள் தொடர்பான மதிப்பீடு | கலாநிதி ருவன் கமகே – சிரேஷ்ட விரிவுரையாளர், தேசிய நூலக விஞ்ஞான நிறுவனம் கொழும்பு பல்கலைக்கழகம் |
| 3. | ரீ.எச்.சி. ஜயமி த சில்வா | கனிஷ்ட வகுப்பு மாணவர்கள் மத்தியில் வாசிப்பு ஊக்குவிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சிகள் தொடர்பான மதிப்பீடு (அம்பலங்கொட கல்வி வலயத்தின் ஹிக்கடுவ கோட்டக் கல்வி ஆசிரியர்களை மையமாகக் கொண்டது.) | பி.ஜீ பேமதாஸ – சிரேஷ்ட விரிவுரையாளர், தேசிய நூலக விஞ்ஞான நிறுவனம் கொழும்பு பல்கலைக்கழகம் |
| 4. | வை.எஸ். சாந்தனி த சில்வா | கனிஷ்ட வகுப்பு மாணவர்கள் மத்தியில் வாசிப்பு ஊக்குவிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சிகள் தொடர்பான மதிப்பீடு (கொ.ஃ.கொழும்பு தெற்கு கல்வி கோட்டப் பிரிவின் ஆசிரியர்களை மையமாகக் கொண்டது.) | பி.ஜீ பேமதாஸ – சிரேஷ்ட விரிவுரையாளர், தேசிய நூலக விஞ்ஞான நிறுவனம் கொழும்பு பல்கலைக்கழகம் |
| 5. | ஐ.எம்.ஜீ. ரமனி குமாரி | ஆசிரிய நூலகர்களுக்காக நடைமுறைப்படுத்தப்படுகின்ற பயிற்சி நிகழ்ச்சிகள் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் தொடர்பில் காணப்படுகின்ற செயற்பாட்டுப் பகுதி தொடர்பான விமர்வன ஆய்வு. (2012 வருடத்தில் குருணாகலை வலயத்தில் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட ஆசிரிய நூலகர்களை மையமாகக் கொண்டது. | ஆர்.பி.பி. ரணவீர – பணிப்பாளர், தேசிய நூலக விஞ்ஞான நிறுவனம் கொழும்பு பல்கலைக்கழகம் |

# தேசிய நூலக விஞ்ஞான நிறுவனம்

2014 – 12 – 31 தினத்தின் கணக்கறிக்கை

| | குறிப்பு | 2014 | 2013 |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| சொத்துக்கள் | | | |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | |
| நிதி | 04 | 3,622,578 | 2,130,438 |
| கிடைக்கப் பெற வேண்டிய வருமானம் | 05 | 1,818,189 | 1,456,821 |
| பொருட்களின் இருப்பு | | 158,603 | 82,339 |
| முற்கொடுப்பனவு | 06 | 63,711 | 61,054 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 07 | 3,696,194 | 3,369,526 |
| | | 9,359,275 | 7,100,178 |
| நிலையான சொத்துக்கள் | | | |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 3 | 86,000 | - |
| இயந்திரங்களும் உபகரணங்களும் | 3 | 6,026,174 | 5,884,841 |
| காணி மற்றும் கட்டிடங்கள் | 3 | - | 674,800 |
| | | 6,112,174 | 6,562,641 |
| மொத்த சொத்துக்கள் | | 15,471,449 | 13,662,819 |
| | | | |
| பொறுப்புக்கள் | | | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | |
| செலுத்த வேண்டிய பொறுப்புக்கள் | 08 | 529,357 | 456,176 |
| குறுங்கால ஒதுக்கீடுகள் | 09 | 4,082,475 | 2,934,547 |
| | | 4,611,832 | 3,390,223 |
| நிலையான பொறுப்புக்கள் | | | |
| சேவை சார் இலாபங்கள் | 2 | 2,961,471 | 2,307,633 |
| | | 2,961,471 | 2,307,633 |
| முழுப் பொறுப்புக்கள் | | 7,573,303 | 5,698,356 |
| மொத்த சொத்துக்கள் | | 7,898,146 | 7,964,463 |
| தேறிய சொத்துக்கள் / பகுதி முதலீட்டுப் பங்களிப்பு | | | |
| | | | |
| ஏனைய அரச நிறுவனங்கள் | 10 | 35,393,223 | 33,545,451 |
| மொத்த மிகை / பற்றாக்குறை | 11 | (27,495,077) | (25,580,989) |
| மொத்த தேறிய சொத்துக்கள் | | 7,898,146 | 7,964,463 |

# தேசிய நூலக விஞ்ஞான நிறுவனம்

2014 – 12 – 31 தினத்தில் முடிவுற்ற வருடத்திற்கான வருமான மற்றும் செலவுக்கு கணக்கு

| | குறிப்பு | 2014 | 2013 |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| வருமானம் | | | |
| வரி | | | |
| கட்டணம் (தண்டம் மற்றும் அனுமதிப்பத்திரம்) | 12 | 4,902,904 | 5,946,023 |
| மீண்டெழும் மற்றும் பராமரிப்பு ஒதுக்கு | | 179,082 | |
| அரச ஒதுக்கீடு | 13 | 12,000,000 | 11,914,000 |
| ஏனைய வருமானங்கள் | 14 | 1,308,697 | 1,588,285 |
| மொத்த வருமானம் | | 18,390,683 | 19,448,808 |
| செலவுகள் | | | |
| சம்பளம் மற்றும் ஊழியர் கொடுப்பனவுகள் | 15 | 13,621,004 | 13,148,980 |
| விநியோகம் மற்றும் ஏனைய நுகர்வு | 01 | 703,985 | 927,175 |
| தேய்வு | 03 | 1,379,593 | 1,173,977 |
| ஏனைய செலவுகள் | 16 | 3,649,263 | 4,129,858 |
| நிதிக் கிரயம் | 01 | 22,140 | 9,711 |
| KEID செயற்திட்டச் செலவு | | - | 275,000 |
| மொத்தச் செலவு | | 19,375,991 | 19,664,702 |
| வருடத்தின் தேறிய மிகை / குறை | | (985,308) | (215,893) |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. ஈசீ/ஜீ/என்ஐஎல்ஐஎஸ்/எப்ஏ/14
ඔබේ අංකය / உமது இல. / Your No.
දිනය / திகதி / Date 2016 சனவரி 06

பணிப்பாளர்,
தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவகம்
கொழும்பு பல்கலைக்கழகம்

**கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108 ஆம் பிரிவுடன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல்கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் உப பிரிவின் பிரகாரம், விரிவான அறிக்கையொன்று நிறுவகத்தின் பணிப்பாளருக்கு 2015 செப்தெம்பர் 14 ஆந் திகதி வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03

(i) முன்னைய காலப்பகுதிகளில் தவறின் தன்மை மற்றும் வரிசை உருப்படிகளுக்காக சரிப்படுத்தப்படவேண்டிய தொகை வெளிப்படுத்தப்பட வேண்டியிருப்பினும், அனைத்து முன்னைய வருட சீராக்கங்களும், பேரேட்டுக் கணக்கொன்றினூடாக சீராக்கம் செய்து அந்த கணக்கின் ரூபா 928,781 ஆன வரவு மீதியொன்று திரண்ட பற்றாக்குறைக்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் கணக்கீட்டு கொள்கைகளை மாற்றுதல் தொடர்பில் அவ்வாறு மாற்றுவதற்கு காரணமாக அமைந்த மற்றும் முன்னோக்கி சீராக்கம் செய்யப்பட்ட கணக்கீட்டு கொள்கையாக கருதி குறித்த கணக்கு மீதிகளின் முன்கொண்டு வந்த பெறுமதிகளுக்கு சீராக்கி

ஒப்பீட்டு ரீதியான தவல்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - 07

(i) முழுமையாக தேய்விடப்பட்ட எனினும் தொடர்ந்தும் பாவனைக்குட்படுத்தப்படுகின்ற ரூபா 26,058,970 கிரயமான நிலையான சொத்துக்களின் நியாயப்பெறுமதியினை காண்பிப்பதற்காக மீள்மதிப்பீடு செய்து கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை அகற்றும் பொது ஏற்படும் நலன்களும் நட்டங்களும் சீராக்கப்பட வேண்டுமெனினும், சேதமடைந்த பொருட்களாக 2014 திசெம்பர் மாதத்தில் அகற்றப்பட்ட 102 அலகுகளுக்குரிய கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்விற்குரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.2.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறான 07 கணக்கு விடயங்களின் மீதிகள் பட்டோலைகள் மற்றும் அறிக்கைகளிலுள்ள மீதிகளுடன் இணக்கம் செய்யும் போது ரூபா 3,436,611 கூட்டுத்தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

06 நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 104,408 கூட்டுத்தொகையான பெறுமதி சேர் வரி தொடர்பான அறிக்கை 2006 இன் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 5.4.12 வழிகாட்டலின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2014 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் தொழிற்பாடுகளால் ஏற்பட்ட நிதி விளைவு

ரூபா 985,307 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் இதற்கொப்பாக, முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 215,893 ஆனமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவு ரூபா 769,414 ஆல் வீழ்ச்சியடைந்திருந்தது. செலவினங்கள் ரூபா 288,712 இனால் குறைவடைந்திருந்ததெனினும், கட்டணங்கள், தண்டப்பணங்கள் மற்றும் அனுமதிப்பத்திர வருமானம் ரூபா 1,043,119 இனால் குறைவடைந்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது. வருடாந்தப் பற்றாக்குறை உயர்வடைந்த காரணத்தால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட பற்றாக்குறை ரூபா 27,495,077 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1999 இன் 01 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவக வழிகாட்டலின் 4(அ) மற்றும் (இ) பிரிவுகளின் பிரகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் 2003 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலத்தினுள் 36 பட்டப்பின்படிப்பு பாடநெறிகளும், 15 டிப்ளோமா கற்கைநெறிகளும், 37 சான்றிதழ் பாடநெறிகளுமாக 88 கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்பட்டு 1,533 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், அவற்றுள் 789 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) நிறுவகத்தினால் 2003 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டுவரை ஆரம்பிக்கப்பட்டிருந்த 15 பாடநெறிகளில் 13 பாடநெறிகளின் பாட விதானம் திருத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 07 மாணவர் மாத்திரம் பதிவு செய்திருந்த 2007 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பேராசிரியர் / கலாநிதி 2007/2010 மூன்று வருட பாடநெறி 08 வருடங்கள் கடந்திருந்த போதிலும் நிறைவு செய்ய முடியாதிருந்ததுடன், ஐந்து மாணவர்கள் பாடநெறியைக் கைவிட்டுச் சென்றிருந்தனர். மேலும் 05 பாடநெறிகள் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட தினத்தை விட 03 மாதங்கள் முதல் 07 மாதங்களுக்கு அதிகமான காலம் கடந்திருந்த போதிலும் பூர்த்தி செய்ய முடியாது போயிருந்தது.

(ஈ) போதியளவான மாணவர்கள் விண்ணப்பிக்காத காரணத்தால் 05 பாடநெறிகளும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள மேலும் 09 பாடநெறிகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் நடாத்த முடியாதிருந்தது.

(உ) காலாண்டு ரீதியாக வெளியிடத் திட்டமிடப்பட்ட சிங்கள மற்றும் தமிழில் அச்சிடப்பட்ட செய்திப்பத்திரிக்கைகளை மீளாய்வாண்டில் வெளியிட முடியாது போயிருந்தது.

4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணத்தினை கையேற்பதற்காக நிரந்தர உத்தியோகத்தரொருவரை நியமிக்காமை, காசேட்டை நாளாந்தம் சமப்படுத்தாமை, அதில் உள்ளடக்கப்பட்டுள்ள தொகைகளை அங்கீகாரமின்றி மாற்றுதல், தொடர் இலக்கத்தின் அடிப்படையில் பற்றுச்சீட்டுக்களை வழங்காமை மற்றும் அவ்வெண்களை மாற்றிய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றமை, நாளாந்த பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளை முறையாக காசேட்டில் உள்ளடக்காத சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றமை, காசோலை புத்தகங்களை வழங்குவதற்கான பதிவேடொன்று பேணப்படாமை, எழுதப்பட்ட காசோலைகளை அடிக்கடி இரத்துச் செய்தல் மற்றும் மீளாய்வாண்டில் ரூபா 2,355,625 பெறுமதியான 81 காசோலைகள் இரத்துச்செய்யப்பட்டிருந்தமை, காசோலை இலக்கம் மற்றும் பெறுமதி என்பன காசேட்டிலும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களிலும் வேறுபடும் சந்தர்ப்பங்கள் உள்ளமை, இரத்துச்செய்யப்பட்ட காசோலைகளின் பதிவேடு பூர்த்தி செய்யப்பட்டிருக்காமை போன்ற காரணங்களால் நிதிக் கட்டுப்பாடு திருப்திகரமற்ற நிலையிலுள்ளமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) உலக வங்கியின் இரண்டாவது பொது கல்விச் செயற்திட்டத்தின் கீழ் ஆசிரிய நூலகர்களை பயிற்றுவிப்பதற்காக தேசிய நூல் நிலைய மற்றும் தகவல் விஞ்ஞான கல்வி நிறுவகம் தாபிக்கப்பட்டிருந்ததுடன், 2009 ஆகஸ்ட் 27 ஆந் திகதிய 09/1488/316/055 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் நூலக மற்றும் தகவல் விஞ்ஞான ஆசிரியர்கள் (ஆசிரிய நூலகர்கள்) மூலம் பெற்றுக்கொள்ள வேண்டிய தொழிற் தகைமைகள், இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக்குறிப்பில் உள்ளடக்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

எனினும், இதுவரையில் ஆசிரியர் சேவை பிரமாணக்குறிப்பிற்குரிய தொழிற்தகைமைகளை உள்ளடக்குவதற்கு தவறியிருந்தது.

(இ) 1999 இன் 01 ஆம் இலக்க தேசிய நூல்நிலையம் மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவக வழிகாட்டியின் 7(3) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பிற்குள் உயர் பட்டப்படிப்பு குழுவொன்று உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் நிறுவனத்தினுள் உயர் பட்டப்படிப்பு குழுவொன்று தாபிக்கப்பட்டிருக்காமையால் பேராசிரியர் / கலாநிதி பாடநெறி பிரமாணக்குறிப்பின் பிரகாரம் உயர் பட்டப்படிப்பு குழுவொன்றின் மூலம் நடாத்தப்பட வேண்டிய அந்த பாடநெறிக்குரிய செயற்பாடுகள் கலைக்குழுவினூடாக நடாத்தப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் இருப்பு நுகர்வு செலவினம் ரூபா 406,023 ஆக இருந்த போதிலும் இருப்பு விநியோகம் தொடர்பில் முறையான கட்டுப்பாட்டு முறைமைகள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2003 ஆம் ஆண்டின் போது நிறுவகத்தைக் கட்டியெழுப்புதல் தொடர்பாக பொதுக் கல்வி அபிவிருத்தி செயற்திட்டத்திடமிருந்து (GEP2) பெறப்பட்ட ரூபா 2,700,000 தொகை இலக்கிடப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படாமல் பல வருடங்களாக நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

## 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய வருடத்தின் கணக்கீட்டு வழுக்களை சீராக்குதல் வெளித்தரப்பினருக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், அந்த வழுக்கள் முழுமையாக சீராக்கம் செய்யப்பட்டிருக்காத நிலையில் ரூபா 30,000 கொடுப்பனவொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 1995 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம், அமைச்சரவை, பொது நிர்வாக அமைச்சு அல்லது திறைசேரியினால் குறித்துரைத்து அங்கீகரிக்கப்பட்ட நலன்கள் மாத்திரம் ஊழியர்களுக்கு செலுத்தப்பட வேண்டுமெனினும், அவ்வாறு அங்கீகாரம்

பெற்றுக்கொள்ளாமல் கையளிப்பு அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தரொருவருக்கு மற்றும் 04 பதவியணி உத்தியோகத்தர்களுக்கு பாடநெறி இணைப்புக் கட்டணம் மற்றும் உதவிக் கட்டணமாக ரூபா 131,533 மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது.

4.5 பதவியணியினர் நிருவாகம்

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 04 அங்கீகரிக்கப்பட்ட பதவியணி வெற்றிடங்கள் நிலவின. அவற்றுள் பதவிநிலையற்ற 03 பதவி வெற்றிடங்களுக்கு 2007 மற்றும் 2011 ஆம் ஆண்டுகள் தொடக்கம் பணிக்கையளித்தல் அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட மூன்று உத்தியோகத்தர்களின் சேவை பெறப்பட்டிருந்தது.

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய நிறுவனக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, தற்போது சேவையிலுள்ள ஆளணி தொடர்பான விபரங்கள், வருடாந்த செயற்பாடுக்கான நிதித் தேவைப்பாடுகளுக்கான திட்டம், பாதீடு, கொள்வனவு திட்டம் மற்றும் உள்ளக கணக்காய்வு திட்டம் என்பன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆம் திகதியின் PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.1 ஆம் பிரிவின் படி பாதீட்டுடன், பாதீடு செய்யப்பட்ட வருமானக் கூற்று, ஐந்தொகை மற்றும் காசுப்பாய்ச்சற்கூற்று என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பாதீட்டப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம், செலவினம் என்பவற்றுக்கிடையே 10 சதவீதம் தொடக்கம் 112 சதவீதம் வரையிலான முரண்கள் காணப்பட்ட காரணத்தால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக உபயோகிக்கப்பட்டிருக்கவில்லை.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளிலும் கட்டுப்பாடுகளிலுமுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பதிவேடுகள் பேணுதல்
(இ) நிதிக்கட்டுப்பாடு
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) களஞ்சியக் கட்டுப்பாடு
(ஊ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(எ) முற்பணக் கட்டுப்பாடு
(ஏ) கொள்வனவு நடவடிக்கைகள்

எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

NILIS

National Institute of

Library and Information Sciences

University of Colombo, P.O. Box 1698 Colombo 03, Sri Lanka

Tele /Fax: +94-11-2507150, e-mail: director@nilis.cmb.ac.lk, Web: www.nilis.cmb.ac.lk

எனது எண் : NILIS/35/2/14

02-03-2016

கணக்காய்வாளர்

கணக்காய்வுத் திணைக்களம்

இல. 306/72, பொல்துவ வீதி பத்தரமுல்ல

**ஐயா கொழும்பு பல்கலைக்கழகத்தின் இணை நிறுவனமான தேசிய நூலக விஞ்ஞான நிறுவனத்தின் 2014 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைகின்ற வருடத்திற்கான கணக்கறிக்கை சம்பந்தமாக 1978 இலக்கம் 16 பல்கலைக்கழகச் சட்டத்தின் 108 பிரிவின் கீழ் கணக்காய்வு அறிக்கை.**

எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ள EC/G/NILIS/FA/14 என்ற கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக எமது நிறுவனத்தின் கருத்துரைகள் மற்றும் விளக்கங்கள் கீழ்வருமாறு.

2.2 கணக்காய்வு அறிக்கை பற்றிய கருத்துரைத்தல்

2.2.1 இலங்கை அரச பிரிவின் கணக்குத் தராதரங்கள்

(அ) இலங்கை அரச பிரிவின் கணக்கு வைத்தல் சம்பந்தமான தராதரம் 03

(i), (ii) எதிர்வருகின்ற வருடங்களின் கணக்குகளை தயார்செய்கின்ற போது உரிய வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ஆ)இலங்கை அரச பிரிவின் கணக்கு வைத்தல் சம்பந்தமான தராதரம் 07

(i) தேய்வுக்குட்படுத்தப்பட வேண்டிய நிலையான சொத்துக்கள் தொகுதியை இனங்கண்டு தேய்வை மேற்கொள்வதற்கு எதிர்காலங்களில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ii) குறித்த ஒழுங்குபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு 2015 இன் இறுதிக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2.2.2 2015 ஆம் வருடத்தில் கணக்குகளைத் தயார்செய்யும் போது உரிய செம்மையாக்கள் மேற்கொள்ளப்பட்டு கணக்குகளில் உள்ளடக்கப்படும்.

2.3 சட்டதிட்டங்கள், நிபந்தனைகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு உட்பட்ட வகையில் காணப்படாமை.

தற்போது பெறுமதி சேர்க்கப்பட்ட வரி தொடர்பான சட்டதிட்டங்களுக்கு ஏற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

3.0 நிதிக் கணக்கு

3.1 நிதிப் பெறுபேறு

புதிய பாடநெறிகளை அறிமுகப்படுத்துகின்றபோது பாடநெறிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்கும் நிறுவனத்தின் செலவுகளை கூடியளவு குறைப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4.0 இயக்கக் கூற்று

4.1 முன்னேற்றம்

(அ) இந்த சகல தரப்பட்ட பாடநெறிகளுக்காகவும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் உயர் சபையின் மற்றும் பரிபாலன சபையின் அனுமதி பெறப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கான உரிய விண்ணப்பப் படிவங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

(ஆ) 2003 வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட (MTL), (PGTL) பாடநெறிகளின் விடயதான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2012 வருடத்தில் விடயதான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, உயர் சபையின் அனுமதி பெறப்பட்டுள்ளதுடன், 2014 ஆம் வருடத்திலும் 2015 ஆம் வருடத்திலும் பல தடவைகள் குழு கூடப்பட்டுள்ள அதேவேளை, இது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

(இ) இப்பாடநெறிகளில் ஆரம்பத்தில் இணைந்துகொள்கின்ற மாணவர்களின் ஒரு பகுதியினர், பலதரப்பட்ட காரணங்களுக்காக பாடநெறிகளைப் பூரணப்படுத்த முடியாமல் பாடநெறிகளிலிருந்து விலகிக் கொண்டுள்ளனர். தற்போது கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மாணவர்களது ஒரு மாணவி தமது பட்ட ஆய்வு அறிக்கையை ஒப்படைத்துள்ள அதேநேரம், ஏனைய மாணவர்கள் தமது பட்ட ஆய்வு அறிக்கை நடவடிக்கைளில் தற்போது ஈடுபட்டுள்ளனர். MPhil/PhG/2011/2014 பாடநெறிகளுக்காகப் பதிவுசெய்துள்ள மாணவர்கள், இதுவரை அவர்களது பட்ட ஆய்வு அறிக்கைகளைப் பூரணப்படுத்தாமையின் காரணமாக பாடநெறிகளை பூரணப்படுத்துவதற்கு முடியாமல் உள்ளது.

MTL2014/2015 மற்றும் PGTL2014/2015 பாடநெறிகளில் 2014 ஜுலை மாதம் வரை தவணைப் பரீட்சைகள் நடாத்தப்பட்டு முடிவுற்றிருக்கின்ற அதேவேளை, மாணவர்களின் பட்ட ஆய்வு அறிக்கைகளை ஒப்படைப்பதற்குத் தவறியுள்ளனர். PLIM2014/2015 மற்றும் DLIM2013/2014 பாடநெறிகளில் 2015 ஜுலை மாதம் வரை சகல தவணைகளதும் பரீட்சை முடிவுற்றுள்ள அதேநேரம், மாணவர்களுக்கு அவர்களின் ஒப்படைகளை ஒப்படைப்பதற்கு முடியாமல் போயுள்ளது.

(ஈ) செயற்திட்ட திட்டமிடலிற்கு ஏற்ப நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற பாடநெறிகளை நடாத்துவதற்கு முடியாமல் போனதற்குக் காரணம், மாணவர் தொகை இல்லாமையினாலாகும்.

4.2 முகாமைத்துவ வினைதிறனின்மை

(அ) குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ஆ) ஆசிரிய நூலகர்களின் உயர்வு தொடர்பான விதிமுறைகள் ஏற்படுத்தப்பட்டு அவர்களது பதவிப் பெயர்களுக்கு அங்கீகாரத்தை ஏற்படுத்தல் என்ற காரணத்தை அங்கீகரிப்பதற்கு கல்வி அமைச்சின் மூலம் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாமையின் காரண மாக எமது நிறுவனத்தின் பாடநெறிகளுக்காக பதவி செய்வதற்கு ஆசிரியர்கள் அசிரத்தை காட்டுகின்றார்கள். இக்காரணம் தொடர்பாக தொடர்ந்தேர்ச்சியாக கல்வி அமைச்சுக்குத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக கடந்த பாராளுமன்ற சபைக் கூட்டத்தின்போது கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அக்காலங்களில் காணப்பட்ட COPE தலைவர்

தெரிவித்ததன் பிரகாரம், இப்பிரச்சினைக்குத் தீர்வை ஏற்படுத்திக் கொள்வது கல்வி அமைச்சு மற்றும் உயர் கல்வி அமைச்சு என்பன இணைந்து மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை யாகும். இது தொடர்பாக தற்போதைய கல்வி அமைச்சருடன் கலந்துரையாடல்கள் மேற்கொள் ளப்பட்டுள்ளன. 2015 டிசம்பர் மாதத்தில் கலந்துரையாடலொன்று மேற்கொள்ளப்பட்டது.

(இ) விதிமுறைகள் 7(03)இன் படி நிறுவனத்தின் சகல கல்வி ஆய்வுகள் மற்றும் பரீட்சைகள் தொடர்பாக அனுமதி வழங்குவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருப்பது கல்விக் குழுவுக்கே ஆகும். இதன் காரணமாக உயர் பட்டம் தொடர்பான குழு கூட்டப்படாத சந்தர்ப்பங்களில் கல்விக் குழுவின் ஆலோசனை முகாமைத்துவ சபையின் அனுமதிக்கு மற்றும் உயர் சபையின் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. 2015 ஆம் வருடத்தில் உயர் பட்டக் குழுவிற்கும் விதந்துரைக்கப்பட்டுள்ளது.

(ஈ) பரிசீலனை செய்யப்பட்டு, சரிசெய்யப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

4.3 திரவத் தன்மை தொடர்பான பிரச்சினையொன்றின் போது நிதி என்ற வகையில் ஏற்படக் கூடிய பிரச்சினை நிலைமைகளைத் தவிர்ந்துகொள்வதற்கு நிரந்தர வைப்பின் மீது மூலதனமிடப்பட்டுள்ளது.

4.4 கருத்து வேறுபாட்டுக்கு உள்ளான நடவடிக்கைகள்

(அ) முகாமைத்துவ சபையின் அனுமதிக்கு ஏற்ப ஒப்பந்த அடிப்படையில் வெளி நபர்களுக்கு இந்நடவடிக்கைகளை பொறுப்புச் சாட்டப்பட்டுள்ளதுடன், முகாமைத்துவ சபையின் அனுமதியுடன் குறித்த செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) முகாமைத்துவ சபை மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ள பாடநெறிகள், பாதீட்டு ஆவணங்களில் மாற்றப்பட்டுள்ளதன்படி பெறப்பட்டுள்ள நிதித் தொகையிலிருந்து இவ்வாறு செலவு செய்யப்பட்டுள்ளது.

4.5 ஊழியர்களின் பரிபாலனம்

இது தொடர்பாக அமைச்சர் அவர்களின் ஆலோசனைகள் பெறப்பட்டு, வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

5.0 கணக்கு நடவடிக்கைகள் மற்றும் நல்லாட்சி

5.1 நடவடிக்கத்தை திட்டம்

குறித்த விளக்கங்களை உள்ளடக்கியதாக மீண்டும் வருடாந்த நடைமுறைத் திட்டத்தை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

5.2 பாதீட்டு ஆவண பரிபாலனம்

(அ) பாதீட்டை உள்ளடக்கியதான கணக்கறிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

(ஆ) காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நன்றி: பிரசன்ன ரணவீர
பணிப்பாளர்

பிரதிகள்

1. உபவேந்தர் / கொழும்பு பல்கலைக்கழகம்
2. தலைவர் / பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்கு
3. செயலாளர் / பல்கலைக்கழக கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு
4. செயலாளர் / நிதி அமைச்சு